(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
2nd Term Examination - 2023

NFWC

கணக்கீடு
Accounting

Three Hours 10 Min.

Gr -12 (2024)

33 T

சுட்டெண்

பகுதி - I

அறிவுறுத்தல்கள்:-

- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.
- மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 15	
16 - 25	
மொத்தம்	

01) நிதிக்கணக்கீடு, முகாமைக் கணக்கீடு தொடர்பான தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் நிதிக்கணக்கீட்டுடன் தொடர்புடைய தகவல்கள் எவை?

A - வரலாற்றுத் தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்படும்.
B - உள்ளக பிரிவினருக்கு மாத்திரம் தகவல்கள் முன்வைக்கப்படும்.
C - குறிப்பிட்ட கணக்காண்டு காலத்திற்கான தகவல்கள் ஒரு தடவை முன்வைக்கப்படல்
D - முகாமைக்கு அவசியமான சந்தர்ப்பங்களின் போது தகவல்கள் முன்வைக்கப்படுதல்.

(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) A யும் C யும்
(4) C யும் D யும் (5) B யும் D யும் (..........)

- **02, 03, 04 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

டென்சி நிறுவனம் தளபாடங்களை விற்பனை செய்யும் நிறுவனமாகும். 01.01.2023 இல் ரூபா 10,00,000 பெறுமதியான தளபாடங்களை கடனுக்கு கொள்வனவு செய்தது. இதில் ரூபா 100,000 பெறுமதியான உரிமையாளரின் வீட்டுப் பாவனைக்கான அலுமாரியும், நிறுவனத்தின் பயன்பாட்டிற்கான 200,000 பெறுமதியான மேசையும் உள்ளடங்கும்.

எஞ்சிய தளபாடங்களில் 50% மானவை 31.03.2022 இல் ரூபா 600,000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. நிறுவனம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு ஆண்டுக்கு 12% பெறுமானத் தேய்விடுகின்றது.

02) 01.01.2023 இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் கணக்கீட்டுச் சமன்பாட்டின் தேறிய விளைவு.

	நடைமுறையல்லாச் சொத்துக்கள்	+	நடைமுறைச் சொத்துக்கள்	=	பொறுப்புக்கள்	+	உரிமையாண்மை
(1)	+ 200000		+700000	=	+ 900000		---------
(2)	+ 700000		+300000	=	+1100000		−100000
(3)	+ 200000		+700000	=	+1000000		−100000
(4)	+1000000		+700000	=	+1000000		−700000
(5)	+1000000		+800000	=	+ 900000		+900000

(.........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03) தளபாடங்களின் கொள்வனவினை பதிவு செய்வதற்கான மூல ஏட்டையும், பற்றினைப் பதிவு செய்வதற்கான மூல ஆவணமும் முறையே

	கொள்வனவு	பற்று
(1)	கொள்வனவு நாளேடு	கொள்வனவுப் பட்டியல்
(2)	காசுக் கொடுப்பனவு நாளேடு	செலவுறுதிச்சீட்டு
(3)	கொள்வனவு நாளேடு	பற்றுச்சீட்டு
(4)	கொள்வனவு நாளேடு மற்றும் பொது நாளேடு	பொதுநாட்குறிப்புக் கைச்சாத்து
(5)	காசுக் கொடுப்பனவு நாளேடு மற்றும் பொது நாளேடு	பொதுநாட்குறிப்புக் கைச்சாத்து

(..........)

04) அனைத்து கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 31.03.2023 இல் உரிமையில் ஏற்பட்ட தேறிய விளைவு

(1) 148000 அதிகரிப்பு (2) 144000 குறைவு (3) 244000 அதிகரிப்பு

(4) 148000 குறைவு (5) 144000 அதிகரிப்பு (..........)

➢ **05, 06 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பெறுமதிசேர் வரிக்காக (VAT) பதிவு செய்யப்பட்ட சந்திரன் Ltd ஆனது 15.03.2023 இல் சுக்கிரன் நிறுவனத்திற்கு கடனுக்கு ரூபா 728000 பொருட்களை விற்பனை செய்தது. இவ்விலைப்பட்டியல் பெறுமதியானது 12% பெறுமதிசேர் வரியை (VAT) உள்ளடக்கியுள்ளது. குறைபாடுகள் காரணமாக சுக்கிரன் நிறுவனமானது ரூபா 84000 பட்டியல் விலைப் பெறுமதியுள்ள பொருட்களை திருப்பியனுப்பியது. 31.03.2023 இல் சுக்கிரன் நிறுவனம் சந்திரன் நிறுவனத்திற்கு முழுத்தொகையினையும் தீர்ப்பதற்கு காசோலை ஒன்றை வழங்கியது.

05) மேலே குறிப்பிட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் அவை ஏற்பட்ட ஒழுங்குவரிசைப்படி சுக்கிரன் நிறுவனத்தின் ஏடுகளில் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்கள்

(1) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(2) பட்டியல், வரவுத்தாள், வைப்புத்துண்டு
(3) பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(4) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
(5) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, செலவுத்தாள், பற்றுச்சீட்டு (..........)

06) சந்திரன் நிறுவனத்தின் புத்தகங்களில் திரும்பலைப் பதிவு செய்வதற்கான நாட்குறிப்பு பதிவு

(1)	உட்திரும்பல் கணக்கு வரவு	73920	
	VAT கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு	10080	
	கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு		84000
(2)	உட்திரும்பல் கணக்கு வரவு	75000	
	VAT கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு	9000	
	கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கு செலவு		84000
(3)	உட்திரும்பல் கணக்கு வரவு	84000	
	கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு		84000
(4)	உட்திரும்பல் கணக்கு வரவு	84000	
	VAT கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு		9000
	கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு		75000
(5)	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு	84000	
	வெளித்திரும்பல் கணக்கு செலவு		75000
	VAT கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு		9000

(..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

➢ ***07, 08, 09 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.***

சித்தாரா நிறுவனத்தின் 31.03.2023 இலுள்ளவாறான பரீட்சை மீதியானது சமப்படவில்லை. வித்தியாசமானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையானது பின்வரும் வழுக்களை வெளிப்படுத்தியது.

A - 01.04.2022 இல் மேற்கொள்ளப்பட்ட கட்டிட திருத்தச் செலவு ரூபா 10000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது, எனினும் கட்டிடக் கணக்கில் ரூபா 100000 ஆக வரவு வைக்கப்பட்டிருந்தது. (நிறுவனம் கட்டிடங்களுக்கு நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 10% பெறுமானத் தேய்விடுகின்றது)

B - காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரலின் மொத்தம் ரூபா 1000 கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.

C - எதிர்த்தீர்த்தல் ரூபா 120000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1200 என பதிவு செய்யப்பட்டிருந்தது எனினும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

D - பெறப்பட்ட விற்பனை முற்பணம் ரூபா 50000 காசுப் பெறுவனவு நாளேட்டில் விற்பனை எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது.

07) மேற்படி வழுக்களுள் எது தொங்கல் கணக்கிலுள்ள மீதிக்கு வழிவகுத்துள்ளது?

(1) A, B, D *(2)* A, B, C *(3)* A, C, D
(4) B, C, D *(5)* A, B, C, D (........)

08) மேற்படி வழுக்கள் திருத்தப்பட முன்னருள்ள தொங்கல் கணக்கின் மீதி

(1) ரூபா 209 800 செலவு
(2) ரூபா 209 800 வரவு
(3) ரூபா 101 800 செலவு
(4) ரூபா 101 800 வரவு
(5) ரூபா 91 000 செலவு (..........)

09) மேற்படி வழுக்கள் திருத்தப்பட்ட பின்னர் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்தில் தேறிய இலாபத்தில் ஏற்பட்ட குறைவு அல்லது அதிகரிப்பு யாது?

(1) ரூபா 49000 குறைவு
(2) ரூபா 50000 குறைவு
(3) ரூபா 39000 குறைவு
(4) ரூபா 51000 அதிகரிப்பு
(5) ரூபா 50000 அதிகரிப்பு (..........)

10) நிறுவனமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலகப் பயன்பாட்டிற்கான தளபாட உபகரணங்கள் நடைமுறைச்சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இப்பதிவுக்கமைய இங்கு மீறப்பட்டுள்ள கணக்கீட்டு எண்ணக்கரு

(1) தேறல் எண்ணக்கரு
(2) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
(3) பொருண்மை எண்ணக்கரு
(4) வரலாற்றுக்குரிய எண்ணக்கரு
(5) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11) ஒரு வாடிக்கையாளருக்கு சில வியாபார இருப்புக்கள் 2022 நவம்பர் மாதத்தில் விற்பனை செய்யப்பட்டன. அப்பணத்தை அவர் 2023 பெப்ரவரியில் தருவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும் 31.12.2022 முடிவடைந்த ஆண்டில் விற்பனை வருமானமாக கொள்ளப்பட்டதுடன் அத்தொகை கடன்பட்டோரிலும் சேர்க்கப்பட்டிருந்தது. மேற்படி நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமைந்த கணக்கீட்டு எண்ணக்கருக்கள் எவை?

(1) தேறல் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு
(2) வரலாற்றுக்குரிய எண்ணக்கரு, இணைதல் எண்ணக்கரு
(3) அலகுசார் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு
(4) தேறல் எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு
(5) பொருண்மை எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு (..........)

12) பூரணி நிறுவனம் தங்கள் நிறுவனத்தின் சிறு செலவுக்காசுக் கட்டுநிதியை ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் மீள்நிரப்புவது வழக்கமாகும். 2023 ஜனவரி மாதத்தில் இருந்து சிறுசெலவுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக மாதாந்த கட்டுநிதியை ரூபா 100 ஆல் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2022 டிசம்பர், 2023 ஜனவரி மாதங்களின் முடிவில் சில்லறைக் காசு மீதி முறையே ரூபா 400, ரூபா 600 ஆகும் ஜனவரி மாத சில்லறைச் செலவுகளின் மொத்தம் ரூபா 1200 ஆகும். வேண்டப்படுவது

	2023 ஜனவரியில் கட்டுநிதி மீள் நிரப்பல் தொகை	2022 டிசம்பர் மாதத்தில் காசு சில்லறைச் செலவினம்
(1)	ரூபா 1400	ரூபா 1300
(2)	ரூபா 1400	ரூபா 1100
(3)	ரூபா 1100	ரூபா 1300
(4)	ரூபா 1200	ரூபா 1100
(5)	ரூபா 900	ரூபா 1100

(..........)

13) 01.04.2022 இல் ஆரம்பிக்கப்பட்ட அரவிந்தன் நிறுவனத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

	"000" ரூபாவில்
விற்பனை வருமானம்	1000
ஆண்டுக் காலத்தில் கடன் கொள்வனவுகள்	500
ஆண்டுக் காலத்தில் காசுக் கொள்வனவுகள்	200
விநியோகத்தரிடம் இருந்து பெற்ற வியாபாரக் கழிவு	100
செயற்பாட்டுச் செலவினங்கள்	120
பொருட்பற்று (கிரயத்தில்)	50
31.03.2023 இல் சரக்கிருப்பு	150

அரவிந்தன் நிறுவனத்தின் மொத்த வருமானமும், மொத்தச் செலவினமும் முறையே

	மொத்த வருமானம் "000" ரூபாவில்	மொத்த செலவினம் "000" ரூபாவில்
(1)	1000	670
(2)	1100	500
(3)	1100	670
(4)	1000	620
(5)	950	620

(..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14) 2023 மார்ச் மாதத்தில் வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட தொகையான ரூபா 2400 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படாத போதிலும் மார்ச் 31 இல் காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் வங்கிக்கூற்று மீதியும் சமமானதாகக் காணப்பட்டது. இதற்கான காரணங்களுள் ஒன்று கீழ்வருவனவற்றுள் எது?

(1) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படாத காசு விற்பனைப் பெறுமதி ரூபா 2400
(2) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறுதலாக இரு தடவை பதிவு செய்யப்பட்ட மின் கட்டணம் ரூபா 1200
(3) வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 2400
(4) வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலையின் பெறுமதி ரூபா 1200
(5) வங்கியில் தவறுதலாக இரு தடவை பதிவு செய்யப்பட்ட செலவுப் பதிவு ரூபா 2400 (..........)

15) 01.11.2022 இல் பெறப்பட்ட 01.11.2022 தொடக்கம் 31.10.2023 வரையான காலப்பகுதிக்கான வாடகை வருமானம் 27600 காசாக பெறப்பட்டுள்ளது. கம்பனியின் கணக்கீட்டு வருடம் டிசம்பர் 31 இல் முடிவடைகின்றது.

	2022 அம் ஆண்டுக்கான வாடகை வருமானம் (ரூபாவில்)	31.12.2022 இல் வாடகை முற்பணம் (ரூபாவில்)
(1)	2300	25300
(2)	4600	25300
(3)	2300	20700
(4)	6900	20700
(5)	4600	23000

(..........)

16) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபநட்டக் கூற்றில் தாக்கல் செய்யப்பட வேண்டிய அறவிடமுடியாக் கடனினதும் ஐயக் கடனினதும் தேறிய தொகையைக் கணிப்பிடுக.

		ரூபா
வருட காலத்தில் பதிவளிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன்		36000
ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடு :	2022.04.01 இல் மீதி	40000
	2023.03.31 இல் மீதி	47000
கடந்த வருடத்தில் பதிவளிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் மீளப் பெறப்பட்டது		3000

அறவிடமுடியா, ஐயக்கடனினது தேறிய தொகை ....

17) பின்வரும் பொதுப்பேரேட்டுக் கணக்கு ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் மூலங்களைக் குறிப்பிடுக.

A - பற்றுக்கள் ....

B - முதலீடுகள் ....

C - பெறுமானத் தேய்வு ....

D - ஐயக்கடன் ஒதுக்கீடு ....

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18) பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றுக்கும் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு

A - கடன்பட்டோரிடம் இருந்து வருமதியான தொகைமீது ஐயக்கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் ....

B - உரிமையாளரின் தனிப்பட்ட ஆயுட்காப்புறுதிக் கட்டணம் நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட போது பற்றாக கருதி பதிவுகள் மேற்கொள்ளப்படல் ....

C - ஐந்து வருடங்களுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் பெறுமதி தற்போது அதிகரித்துள்ளது எனினும் இயந்திரம் கொள்விலையில் பதிவு செய்யப்பட்டுள்ளமை. ....

D - ஆண்டுக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கடித உறைக் கோவைகள் காரியாலயத்தில் பல வருடங்கள் பயன்படுத்தத் தக்கவை. இருப்பினும் அவை நடைமுறை யல்லாச் சொத்தாக கணக்கு வைக்கப்படாமை. ....

19) புடவை வியாபாரத்தில் ஈடுபடும் தனியுடமை வணிகமான சமந்தி நிறுவனத்தின் 31.03.2023 இல் உரிமையாண்மையில் ஏற்படுத்தும் தாக்கத்தை அதிகரிப்பாயின் (+) எனவும் குறையுமாயின் (−) எனவும் பெறுமதியுடன் குறிப்பிடுக.

A - ரூபா 50000 விற்பனை விலையைக் கொண்டுள்ள புடவைத் தொகுதி அனாதை இல்லம் ஒன்றுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. இதன் கிரயம் ரூபா 40000. ....

B - உரிமையாளரால் பயன்படுத்தப்பட்ட அலுமாரி ஒன்று 01.04.2022 இல் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கிரயம் ரூபா 80000. (நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு 10% பெறுமானத் தேய்விடப்படுகின்றது. ....

20) நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீடு, நிதிக்கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (T) எனவும் பிழையாயின் (F) எனவும் குறிப்பிடுக.

A - நிதிக்கணக்கீடானது கணக்கீட்டு எண்ணக்கருக்கள் சட்டதிட்டங்கள், மரபுகள், கணக்கீட்டு நியமங்கள் போன்றவற்றுக்கமைவாக தயாரிக்கப்படும். ....

B - முகாமைக் கணக்கீடு எதிர்கால தகவல்களை மட்டும் வழங்குகின்றது. ....

C - நிதிக்கணக்கீடு உள்ளக வெளியகப் பிரிவினர்களுக்கு தகல்களை வழங்குகின்றது. ....

D - முகாமைக்கணக்கீடு பண ரீதியான, பணரீதியற்ற தகவல்கள் இரண்டினையும் வழங்குகின்றது. ....

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அதிகரிக்குமாயின் (+) எனவும் குறையுமாயின் (−) எனவும் அதன் பெறுமதிக்கெதிரே குறிப்பிடுக.

A - கடன் தீர்ப்பனவின் போது விதிக்கப்பட்ட வட்டி ரூபா 1000 உள்ளடங்கலாக கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு ரூபா 50000. ....

B - கொள்விலையில் 8% கூட்டிப் பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 6750 பட்டியல் விலையான பண்டங்களின் வழங்குநருக்கு திருப்பியனுப்பப்படல். ....

22) 01.04.2023 இல் ஆரம்பிக்கப்பட்ட தனியாள் உரிமை வணிகமாகிய பிரணிதா வணிகமானது முகவர்களினூடாக விற்பனையின்றேல் திரும்புக எனும் அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்கின்றது. ஏப்ரல் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 650000. இவற்றில் 500000 கிரமான பண்டங்கள் ரூபா 700000 விலையிட்டு முகவருக்கு அனுப்பப்பட்டது. இம்முகவரால் 30.04.2023 வரை 70% மானவற்றை மட்டுமே விற்பனை செய்யக் கூடியதாக இருந்தது. (திருப்பி அனுப்பும் கால எல்லை இன்னமும் முடிவடையவில்லை) 30.04.2023 இல் உள்ளவாறு முகவரிடம் இருந்த இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 160000 ஆகும்.

பிரணிதா வணிகத்தின் மேற்படி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 30.04.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான விற்பனை வருமானம்

....

(ஆ) 30.04.2023 இல் உள்ளவாறு நிதிநிலமைக்கூற்றில் அறிக்கைப்படுத்த வேண்டிய இருப்பின் பெறுமதி ....

23) வணிகம் ஒன்றின் கணக்கீட்டுப் பதிவேடுகளில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

	31.03.2023 இல் உள்ளவாறு (ரூபாவில்)	31.03.2022 இல் உள்ளவாறு (ரூபாவில்)
சொத்துக்கள்	170000	120000
பொறுப்புக்கள்	50000	40000

31.03.2023 முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் இருந்து கடன் தவணைக்கட்டணம் ரூபா 1000 வட்டி உள்ளடங்கலாக ரூபா 20000 ஐச் செலுத்தியுள்ளார். மற்றும் மாதாந்தம் ரூபா 1000 பெறுமதியான பண்டங்களைச் சொந்த தேவைக்கு பற்றியுள்ளார். 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) இலாபம் ....

(ஆ) நிறுத்தி வைத்த வருவாய் ....

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

24) கணனிகளையும், அதற்கான உதிரிப்பாகங்களையும் விற்பனவு செய்யும் நிறுவனமான றோயல் நிறுவனத்தின் ஏடுகளில் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூலப் பதிவேட்டினைக் குறிப்பிடுக.

		மூலப் பதிவேடு
A -	காசுக்கு கணனிகள் கொள்வனவு	....
B -	பாடசாலை ஒன்றுக்கு கணனி அன்பளிப்புச் செய்தல்	....
C -	தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கடனுக்கு கணனிகள் விற்பனை	....
D -	உரிமையாளர் வீட்டுப்பயன்பாட்டிற்கென கணனி ஒன்றினை எடுத்திருத்தல்.	....

25) 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக் காலப் பகுதியில் பிரபா வணிகத்தில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக ரூபா 90000 பெறுமதியான மிள் விற்பனைக்கான பண்டங்கள் அழிவடைந்திருந்தன. இந்நட்டத்தில் $\frac{2}{3}$ பங்கினை காப்புறுதி நிறுவனம் தருவதாக உறுதியளித்திருந்தது. மேற்படி கொடுக்கல் வாங்கல், நிகழ்விற்கான நாட்குறிப்பு பதிவினைத் தருக.

....

....

....

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

பகுதி - II

➢ முதலாம், இரண்டாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

01) பகலவன் வணிகத்தின் 2023.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

விபரம்	வரவு "000" ரூபாவில்	செலவு "000" ரூபாவில
மூலதனம்		8030
வருமதியாளர், சென்மதியாளர்	440	520
2023.03.31 இல் இருப்பு	120	
காசு	840	
ஆதனப் பொறித் தொகுதி உபகரணங்கள்	11500	
திரண்ட தேய்வு		1400
2022.04.01 இல் ஐயக்கடன் ஒதுக்கீடு (நட்டத்திற்கான படிகள் க/கு)		40
18% வங்கிக் கடன்		400
விற்பனவுகள்		8000
அறவிடமுடியாக் கடன்	10	
விற்பனைக் கிரயம்	5100	
உட்திரும்பல்	20	
சம்பளம் (தேறியது)	360	
	18390	18390

மேலதிக தகவல்கள்

(1) ஆதனப் பொறித்தொகுதி உபகரணம் மற்றும் திரண்ட தேய்வு விபரம் வருமாறு

சொத்து	2023.03.31 இல் கிரயம் "000" ரூபாயில்	2022.04.01. இல் திரண்டதேய்வு "000" ரூபாயில்
அலுவலக உபகரணங்கள்	1500	600
காணிகட்டிடங்கள் (காணியின் கிரம் 5000)	9000	800
மோட்டார் வாகனம்	1000	–
	11500	1400

(2) நிறுவனம் 2018.04.01 இல் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினமே அலுவலக உபகரணங்களும், காணிகட்டிடங்களும் நிறுவனத்தின் சொத்தாக இனங்காணப்பட்டன. மோட்டார் வாகனம் 2023.01.01 இல் கொள்வனவு செய்யப்பட்டது. மோட்டார் வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்.

(3) 2023.03.30 இல் சேந்தனிடம் இருந்து கொள்வனவு ரூபா 100,000 கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும் பொருட்கள் இன்னமும் வந்து சேரவில்லை. இருப்பெடுத்தலின் போது மேற்படி பொருட்கள் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(4) வெளித்திரும்பிய சரக்கு ரூபா 50000 தொடர்பில் ஏடுகளில் பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை.

(5) ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் பங்களிப்பு 10% தொழில் வழங்குநர் பங்களிப்பு 15% ஆகும்.
இவ்வாண்டுகக்கான ஊழியர் சேமலாப நிதிக்கு எதுவித ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கவில்லை.

(6) கடன்பட்டோரில் 10% மாக ஐயக்கடன் ஒதுக்கீட்டை சீராக்கம் செய்க.

வேண்டப்படுவது

(அ) 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் இலாப அல்லது நட்டக்கூற்று.

(ஆ) 2023.03.31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று

(20 புள்ளிகள்)

02) றோயல் நிறுவனமானது மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதுடன், மோட்டார் வாகனங்களை நாள் அடிப்படையில் வாடகைக்கு வழங்கி வருமானத்தை ஈட்டுகின்றது. 01 ஜனவரி 2023 இல் நிறுவனத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு

	"000" ரூபாயில்
மோட்டார் வாகனங்கள்	20000
உபகரணங்கள்	400
காணி கட்டிடங்கள் காணியின் கிரயம் (400000)	1000
பராமரிப்பு பொருட்கள் (இருப்பு)	500
பராமரிப்பு பொருள் வழங்குநர்	100
முற்பண செலவும், நிலுவை வருமானங்களும்	500
நிலுவைச் செலவினமும், முற்பண வருமானமும்	600
வங்கி மீதி	700

2023 ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

ஜனவரி 01 - டேவிட் பீரிஸ் கம்பனியிடம் கொள்வனவு செய்த பராமரிப்பு பொருட்கள் ரூபா 400000

ஜனவரி 03 - 2022 டிசம்பர் 30ம் திகதி தொடக்கம் ஜனவரி 3ம் திகதி வரை வாடகைக்கு வழங்கிய மோட்டார் வாகனத்திற்காக நாள் ஒன்றுக்கு ரூபா 10000 படி 5 நாட்களுக்காக பெற்ற வாடகைப் பணம் ரூபா 50000

ஜனவரி 10 - காசாக பெற்ற பராமரிப்பு சேவை வழங்கல் வருமானம் ரூபா 200000 இதற்காக பயன்படுத்திய பராமரிப்புப் பொருட்கள் ரூபா 30000

ஜனவரி 14 - பராமரிப்பு பொருள் வழங்குநரின் ஆரம்ப மீதியை தீர்க்கும் முகமாக வழங்கப்பட்ட காசோலை ரூபா 970000

ஜனவரி 20 - நிறுவன பயன்பாட்டிலுள்ள மோட்டார் வாகனங்களுக்கு திருத்த பராமரிப்பு வேலைகளைச் செய்தமைக்காக பயன்படுத்திய பராமரிப்பு பொருட்கள் ரூபா 40000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஜனவரி *25* - உரிமையாளரின் சொந்தப் பயன்பாட்டில் உள்ள மோட்டார் வாகனங்களுக்கு திருத்த பராமரிப்பு வேலைகளை செய்வதற்கு பயன்படுத்திய பராமரிப்பு பொருட்கள் ரூபா 50000

ஜனவரி *29* - பெப்ரவரி 2ம் திகதி வரை மொத்தமாக 5 நாட்கள் மோட்டார் வாகனத்தை பயன்படுத்துவதற்கென நாள் ஒன்றுக்கு ரூபா 20000 படி ரூபா 100000 சுற்றுலா நிறுவனம் ஒன்றிடம் இருந்து காசாக பெறப்பட்டுள்ளது.

ஜனவரி *31* - ஜனவரி மாதத்திற்கான ஊழியர் சம்பளம் ரூபா 100000 இதில் ரூபா 80000 மட்டும் காசோலை மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(அ) திகதி ஒழுங்கில் கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலால் எழும் தாக்கத்தினை பெறுமதியுடன் அதிகரிப்பின் (+) எனவும் குறைவாயின் (−) எனவும் அதன் எதிரே குறிப்பிடுக.

திகதி	ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள்	இருப்பு (பராமரிப்பு பொருட்கள்)	முற்பண செலவுகளும் நிலுவை வருமானங்களும்	வங்கி மீதி	உரிமையாண்மை	பராமரிப்பு பொருள் வழங்குநர்	நிலுவை செலவினங்களும் முற்பண வருமானங்களும்
ஆரம்ப மீதி							
ஜன - *1*							
ஜன - *3*							
இறுதி மீதி							

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு ஆண்டுக்கு 12% நேர்கோட்டுமுறையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டுமென்பதை கருத்திற் கொண்டு தேறிய சொத்து அடிப்படையில் நிறுவனம் உழைத்த இலாபம் *or* நட்டத்தைக் கணிப்பிடுக.

(20 புள்ளிகள்)

03) பின்வரும் தகவல்கள் தேனுகா நிறுவனத்துடன் தொடர்புடையதாகும். 2023 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்பட்ட விடயங்கள் வருமாறு

	காசோலை இலக்கம்	பெறுமதி ரூபாவில்
கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்	205120	8500
	205130	7900
வசூலிக்கப்படாத காசோலைகள்	564363	3900
	465336	6100

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

2023 ஏப்ரல் மாதத்திற்கான காசு பெறுவனவு நாளேடு

திகதி	விபரம்	பெறுமதி	பகுப்பாய்வு நிரல்		
			விற்பனை	கடன் பட்டோர்	ஏனைய பெறுவனவு
01.04	சுந்தரி 210405	18000	–	18000	–
10.04	கபிலன் 120504	12000	–	12000	–
18.04	விற்பனை 540021	24000	24000	–	–
24.04	விற்பனை	43000	43000	–	–
27.04	மூலதனம்	40000	–	–	40000
29.04	நிரோஜன் 632032	24000		24000	
	பொது பேரேட்டிற்கு மற்றியது	161000	67000	54000	40000

காசுக் கொடுப்பனவு நாளேடு

திகதி	விபரம்		பெறுமதி	பகுப்பாய்வு நிரல்			
				கொள் வனவு	கடன் கொடுத் தோர்	செலவினம்	ஏனைய கொடுப்பனவு
01-04	மதி	205131	11000	–	11000	–	–
12-04	நிதி	205132	17000	–	17000	–	–
19-04	சம்பளம்	205133	18000	–	–	18000	–
22-04	நந்தன்	205134	15000	–	15000	–	–
24-04	நிதி	205135	17000	–	17000	–	–
26-04	கொள்வனவு	205136	18000	18000	–	–	–
28-04	தளபாடம்	205137	40000	–	–	–	40000
	பொது பேரேட்டிற்கு மற்றியது		136000	18000	60000	18000	40000

2023 ஏப்ரல் மாதத்திற்காக கிடைத்த வங்கிகக்கூற்று வருமாறு

திகதி	விபரம்	வரவு	செலவு	மீதி
01-04-2023	மீதி			67000
02-04-2023	205130	7900		59100
03-04-2023	564363		3900	63000
05-04-2023	210405		18000	81000
07-04-2023	205131	11000		70000
12-04-2023	வங்கிக் கட்டணம்	600		69400
14-04-2023	நேரடி வைப்பு		40000	109400
20-04-2023	540021		24000	133400
24-04-2023	205134	15000		118400
24-04-2023	காசு வைப்பு		43000	161400
27-04-2023	காசு வைப்பு		40000	201400
28-04-2023	205136	18000		183400
30-04-2023	வசூலித்த பங்கிலாபம்		11250	194650

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

மேலதிக தகவல்கள்

(1) கபிலனின் காசோலை மதிப்பிழந்ததாக வங்கி அறிவித்திருந்தது.

(2) நிதிக்கு வழங்கப்பட்ட காசோலை சேதமடைந்ததன் காரணமாக வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனினும் அதற்குப் பதிலாக 205135ம் இலக்க காசோலை வழங்கப்பட்டிருந்து.

வேண்டப்படுவது

(அ) 2023 - ஏப்ரல் மாதத்திற்கான திருத்த முன் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு

(ஆ) 2023 - ஏப்ரல் மாதத்திற்கான திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

(இ) மாற்றப்படாத காசோலைகள், வசூலிக்கப்படாத காசோலைகள் என்பவற்றை பெறுமதிகளுடன் தருக.

(ஈ) 2023 ஏப்ரல் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக்கூற்று

04) சூரியா கம்பனி 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமாக ரூபா 750000 ஐக் கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பின்வரும் வழுக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(1) கொடுத்த கழிவுக் கணக்கு மீதி ரூபா 9200 இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படவில்லை.

(2) விற்பனைகள் ரூபா 200000 மும், விற்பனைகள் மீது பெறுமதி சேர்த்தல் வரி ரூபா 30000 விற்பனைக் கணக்கு செலவு வைக்கப்பட்டது.

(3) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூபா 2000 கழிவை அனுமதித்து பெறப்பட்ட காசோலை ரூபா 21000 வங்கியால் மறுக்கப்பட்டது. இதன் காரணமாக அனுமதிக்கப்பட்ட கழிவும் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. காசோலை மறுக்கப்பட்டமை தொடர்பில் ஏடுகளில் பதிவேதும் செய்யப்படவில்லை.

(4) விற்பனைத் திரும்பல் தொகை ரூபா 3800 விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்பட்டது.

(5) எதிர்த்தீர்த்தல் ரூபா 2000 விற்பனைக் கணக்கு வரவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு வைக்கப்பட்டது.

(6) 2023 ஜனவரி மாதத்தில் இருந்து தொடங்கும் 6 மாத காலப்பகுதிக்காக மேற்கொள்ள வேண்டிய விற்பனை மேம்படுத்தற் செயற்பாட்டிற்காக விளம்பர முகவர் ஒருவருக்கு ரூபா 12000 2022 டிசம்பர் மாதம் செலுத்தப்பட்டது. இது காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவுகள் எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டு விளம்பரக் கணக்கு வரவு வைக்கப்பட்டது.

வேண்டப்படுவது

(அ) வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்

(ஆ) இலாபநட்ட சீராக்கற் கூற்று

05) தாரகை வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியானது மொத்த வியாபாரிகளிடம் இருந்தும் கரையோர சந்தைகளிலும் கடலுணவுகளைக் கொள்வனவு செய்து நாடளாவிய ரீதியில் உள்ள சிறப்புச் சந்தைகளுக்கு (*Super Market*) காசுக்கும் கடனுக்கும் விற்பனை செய்து வருகின்றது.

பின்வரும் தகவல்கள் 2023 மார்ச் மாதத்திற்கான தாரகை கம்பனியுடன் தொடர்புடையதாகும்.

(1) 01.03.2023 இல் மீதிகள்

	"000" ரூபாயில்
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	760
கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	224
காசுக் கணக்கு	860
VAT கட்டுப்பாட்டுக் கணக்கு (செலவு மீதி)	18

(2) 2023 மார்ச் மாதத்திற்கான கடன் கொள்வனவு, கடன் விற்பனை தொடர்பான விபரங்கள் வருமாறு.

- சரணும் திவ்யனும் வழங்குநர்கள் ஆவர்.

சுப்பர் மார்க்கெட் / மொத்த வியாபாரிகள்	விற்பனை / கொள்வனவு திகதி	கொள்வனவு / விற்பனை "000" ரூபாயில்	விற்பனை / கொள்வனவில் உள்ளடக்கப்பட்ட *VAT* "000" ரூபாயில்	காசுப் பெறுவனவு / கொடுப்பனவுத் திகதி	காசுப் பெறுவனவு / கொடுப்பனவு "000" ரூபாயில்	அனுமதித்த/ பெற்ற கழிவு "000" ரூபாயில்	காசோலை இலக்கம்
Happy சுப்பர் மார்க்கெட்	12 - 03	672	72	19 - 03	624	48	178
சரண்	06 - 03	392	42	10 - 03	362	30	121
STAR சுப்பர் மார்க்கெட்	20 - 03	1008	108	28 - 03	850	–	690
திவ்யன்	12 - 03	448	48	18 - 03	416	32	122

(3) எனைய கொடுக்கல் வாங்கல் விபரம் வருமாறு

08.03.2023 - 01.03.2023 இல் நிலுவையாகவிருந்த கடன்கொடுத்தோர் தொகை முழுவதும் *VAT* நிலுவையில் $\frac{1}{2}$ பங்கும் முறையே 119ம், 120ம் இலக்க காசோலை மூலம் கொடுத்துத் தீர்க்கப்பட்டன.

14.03.2023 - காசுக்கு விற்பனை ரூபா 56000 (*VAT* 6000 உள்ளடங்கலாக) இது அன்றைய தினமே வங்கியிடப்பட்டது.

21.03.2023 - சிறிய உற்பத்தியாளர்களிடம் உடன் காசுக்கு கொள்வனவு ரூபா 96000 (*VAT* ஐ புறக்கணிக்குக)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது

(அ) காசுப் பெறுவனவு நாளேடு

(ஆ) காசுக் கொடுப்பனவு நாளேடு

(இ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(உ) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு (20 புள்ளிகள்)

06) வரையறுத்த சுந்தரம் பொதுக் கம்பனியானது பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் பேரேட்டில் இருந்து 2023 ஜனவரி மாதத்திற்கென பிரித்தெடுத்த தகவல்கள் வருமாறு

கடன்பட்டோர் பேரேட்டு மீதி "000" ரூபாவில்

	நந்தன்	விந்தன்	விகிர்தன்	மொத்தம்
01.01.2022 இல் மீதி	100	120	(20)	200
விற்பனைகள் (VAT நீங்கலாக)	200	300	400	900
விற்பனை VAT (12%)	24	24	48	96
காசுப் பெறுவனவுகள்	(150)	(300)	(350)	(800)
அனுமதித்த கழிவு	(20)	(30)	(40)	(90)
	154	114	38	306

கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதி "000" ரூபாயில்

	பிறேமா	கேமா	சந்திரா	மொத்தம்
01.01.2022 இல் மீதி	80	40	90	210
கொள்வனவு (VAT நீங்கலாக)	100	150	300	550
கொள்வனவு மீதான VAT (12%)	12	-	36	48
வெளித்திரும்பல் (VAT 12% உட்பட)	-	-	(56)	(56)
காசுக் கொடுப்பனவு	(150)	(140)	(426)	(716)
	42	50	(56)	36

31.01.2023 இல் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதியும் பேரேட்டு மீதிகளின் மொத்தமும் இணங்கவில்லை. எனினும் ஜனவரி 01 இல் இம் மீதிகள் ஒன்றுடன் ஒன்று இணங்கி இருந்தன. ஏடுகளைப் பரிசீலனை செய்த பொழுது பின்வரும் தவறுகளும் விடுபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

(1) பிறேமாவிடம் பெற்ற கழிவு ரூபா 20000 தொடர்பில் ஏடுகளில் பதிவு எவையும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(2) காசுப் பெறுவனவு நாளேட்டின் கடன்பட்டோரிடம் இருந்தான பெறுவனவுகள் நிரலின் கூட்டுத்தொகை ரூபா 100000 ஆல் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.

(3) நந்தனுக்கு அனுமதித்த கழிவு ரூபா 30000 ஆகும். இது காசுப் பெறுவனவு நாளேட்டில் ரூபா 10000 குறைத்துப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(4) பிறேமாவிற்கான காசுக் கொடுப்பனவு ரூபா 140000 கேமாவிற்கான காசுக் கொடுப்பனவு ரூபா 150000 ஆகும். தனிப்பட்ட கணக்குகளில் இவை கணக்கு மாறிப் பதிவிடப்பட்டிருந்தது.

(5) கேமாவிற்கு திருப்பியனுப்பிய பண்டங்கள் ரூபா 28000 (*VAT* உள்ளடங்கலாக) இதற்கான பதிவு ஏடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.

(6) பிறேமாவிடம் கொள்வனவு ரூபா 50000 (*VAT* நீங்கலான விலையில்) இதற்கான பதிவு முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை.

(7) கேமாவிடம் கொள்வனவு ரூபா 150000 தொடர்பிலும், விந்தனுக்கு விற்பனை ரூபா 100000 தொடர்பிலும் தனிப்பட்ட கணக்குகளில் *VAT* வரி பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது

(அ) (i) திருத்தமுன், கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(ii) திருத்தியபின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(ஆ) (i) திருத்தமுன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(ii) திருத்திய பின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(இ) கேமா, பிறேமாவின் திருத்திய பேரேட்டு மீதிகள்

(20 புள்ளிகள்)